## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

கனோவின் ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் ("கம்பனி") 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி

வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்குளசாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 டிசம்பர் 31 இன் பிரகாரம் அல்லது ஏனைய வியாபார பெறவேண்டியவை ரூபா.105,859,622 இல் 41 சதவீதமான ரூபா.43,049,214 தொகை 360 நாட்களுக்கும் மேலாக நிலுவையாக காணப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக செயலில் உள்ள குத்தகைதாரர்களின் பெறவேண்டியவை ரூபா.59,525,782 இல் ரூபா.10,945,910 அல்லது 18 சதவீதமானவை 90 நாட்களுக்கும் மேலாக நிலுவையாக காணப்படுகின்றது. மேலும், செயல்படாத குத்தகை தாரர்களிடமிருந்தான | செயல்படும் குத்தகைதாரர்களிடம் இருந்து நிலுவைத் தொகையினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. நிலுவையில் உள்ள பெரும்பாலான தொகைகள் வாடகை விலைப்பட்டியல்களைக் குறிக்கின்றன. எனவே, ஒப்பந்தங்களின் பிரகாரம் நிலுவை வாடகை விலைப்பட்டியல்களுக்கு | நிலுவையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா.46,988,804 அல்லது 44 சதவீதமான நிலுவைத் தொகை 90 நாட்களுக்கும் மேலாக காணப்படுகின்றது. | எதிராக 2.5% அபராதம் விதிக்கப்படுகிறது. இதற்கு மேலதிகமாக , 90 நாட்களுக்கு மேலான நிலுவையினை கொண்டுள்ள குத்தகைதாரர்களுக்கு எச்சரிக்கை கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. | |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2023 மே 16 ஆந் திகதியிடப்பட்ட PED 01/2021 (1) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு (AMC) கூட்டம் , இயக்குநர்கள் சபையின் அங்கீகாரததுடன் , உரிய செயல்முறைக்குப் பிறகு நட்டங்களை பதிவழிப்பு செய்ய முடியும் என்ற போதிலும் கம்பனி ரூபா.1,654,747 தொகையான ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களை சுற்றறிக்கையின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றாமல் பதிவழிப்பு செய்திருந்தது. | போலீஸ் முறைப்பாட்டு பதிவு செய்யலாமா அல்லது காணாமல் போன அல்லது தற்போது இல்லாத ஆதனம் பொறி மற்றும் உபகரண உருப்படிகளுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கலாமா என்பது தொடர்பான இறுதி முடிவினை எடுப்பதற்கு கணக்காய்வு குழுவானது இந்த விடயத்தினை இயக்குநர்கள் சபைக்கு அனுப்பியது. போலீஸ் முறைப்பாட்டு பதிவு அல்லது சட்ட நடவடிக்கையைத் தொடர வேண்டாம் என்று இயக்குநர் சபை முடிவு செய்தது. மேலும், காணாமல் போன சொத்துக்களை சொத்து பதிவேட்டில் இருந்து அகற்றல் செய்வதற்கு சபை முடிவு செய்தது. | இந்த விடயம் மீது விசாரணை நடத்தப்படல் வேண்டும். பொறுப்பான நபரிடமிருந்து நட்டத்தினை அறவீடு செய்யவும் மற்றும் சுற்றறிக்கையின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதற்கும் கம்பனி கவனம் செலுத்த வேண்டும். |

## 1.7 காசு முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| Canowin Arcade இல் நாளாந்த கொடுக்கல் வாங்கல்கள் மூலம் சேகரிக்கப்பட்ட ரூபா.374,407 தொகையான பணத்தினை வங்கியில் வைப்புச் செய்யாமல் 06 சந்தர்பங்களில் செலவு செய்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | அவசர தேவைகளுக்கு சேவை பகுதிக்கு பணம் அனுப்புவதில் உள்ள நடைமுறை சிக்கல்கள் காரணமாக இந்த பணம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், கூடிய விரைவில் பணம் மீண்டும் வைபட்பு செய்யப்பட்டுள்ளது. | நாளாந்த கொடுக்கல் வாங்கல்கள் மூலம் சேகரிக்கப்பட்ட பணம் வங்கியில் வைப்பு செய்யப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா.125,700,809 இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா. 97,426,232 ஆக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா. 28,274,577 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. வருமானம் அதிகரித்தமை மற்றும் முதலீட்டுச் சொத்தின் நியாய பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு முன்னேற்றத்திற்கான காரணங்களாகவிருந்தன.

### 2.2 முக்கிய வருமான மற்றும் செலவின விடயங்களின் பகுப்பாய்வு

| நிதிக்கூற்றுக்களின் விடயம் | 2023 | 2022 | 2021 | 2020 | 2019 | முன்னேற்றம் / பின்னடைவு 2022-2023 | |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | % |
| வருமானம் | 183,900 | 162,509 | 137,556 | 130,152 | 137,630 | 21,391 | 13.16 |
| மொத்த இலாபம் | 148,591 | 131,937 | 109,856 | 109,179 | 102,946 | 16,654 | 12.62 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 11,269 | 5,547 | 2,290 | 747 | 5,303 | 5,722 | 103.15 |
| நிதி வருமானம் | 74,868 | 45,074 | 12,455 | 15,511 | 17,801 | 29,164 | 64.70 |
| நிர்வாகச் செலவுகள் | 70,632 | 58,776 | 43,506 | 60,070 | 64,609 | 11,856 | 20.17 |
| வரிக்கு பின் இலாபம் | 125,701 | 97,426 | 58,865 | 36,015 | 41,751 | 31,275 | 32.10 |

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

| விகிதங்கள் | | 2023 | 2022 | 2021 | 2020 | 2019 |
|---|---|---|---|---|---|---|
| மொத்த இலாப விகிதம் | (%) | 81 | 81 | 79.9 | 83.9 | 76.9 |
| மூலதனத்தின் மீதான திரும்பல் விகிதம் | (%) | 9 | 9 | 6.0 | 4.2 | 7.0 |
| நடைமுறை விகிதம் | | 11.5:1 | 9.63:1 | 8.32:1 | 8.6:1 | 7.2:1 |
| விரைவு விகிதம் | | 11.38:1 | 9.53:1 | 8.26:1 | 8.6:1 | 6.9:1 |
| பங்கொன்றின் உழைப்பு விகிதம் (EPS) | | 1.44 | 1.12 | 0.68 | 0.43 | 0.48 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 ஆகஸ்ட் 29 அன்று கணக்காய்வின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம், Canowin arcade இன் "A" மற்றும் "B" தொகுதியின் இருபுறமும் உள்ள 5 ATM இற்கான இடங்களில் 2 ATM இற்கான இடங்கள் வெற்றிடமாக இருப்பதைக் அவதானிக்க முடிந்தது. | குறித்துக்கொள்ளப்பட்டது.<br><br>மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கியிடம் (BOC) வெற்றிடமாக காணப்படும் இடங்களுக்கு ATM அல்லது CRM இயந்திரத்தை நிறுவுமாறு கம்பனி கோரியுள்ளது. | காணப்படுகின்ற இடத்தினை வினைத்திறனாக பயன்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | Canowin arcade இல் அமைந்துள்ள இரண்டு LED திரைகள் (panels) செயல்பாட்டில் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. இந்த திரைகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் (RDA) நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்ட காணியில் அவர்களின் சொந்த நிதியில் நிர்மாணிக்கப்பட்டது. இந்தச் சொத்துக்களின் உரிமையானது வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் கம்பனிக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. RDA அல்லது Canowin Arcade ஆகிய இரண்டு நிறுவனங்களும் இந்த LED திரைகளினை அரசிற்கு வருமானம் ஈட்டுவதற்காக முகாமை செய்யவில்லை. | குறித்துக்கொள்ளப்பட்டது.<br><br>கம்பனியிடம் இருந்து எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் LED திரைகளினை RDA சொந்தமான காணிக்கு மாற்றம் செய்ய RDA ஒப்புக்கொண்டது. கம்பனி ஆட்சேபனையினை தெரிவித்ததால், இந்த LED திரைகளினை மாற்றம் செய்யும் நோக்கத்திற்காக நில அளவீட்டினை செய்ய கம்பனியின் முதல்வரின் அனுமதியை RDA கோரியுள்ளது. அது இறுதியில் வழங்கப்பட்டது, RDA மூலம் நில அளவை செய்து உடனடியாக அடுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர். | வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் ஒரு தீர்மானத்திற்கு வர வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | Canowin arcade இன் நிர்மாத்ததின் ஆரம்ப திட்டத்தின் பிரகாரம், பசுமைக் கருத்துக்கு ஏற்ப மேல் தளத்தின் திறந்த பகுதியில் மரங்களை நடுவதற்கு அது முன்மொழிந்துள்ளது. இருப்பினும், கம்பனி அதன் தொடக்கத்திலிருந்து இதுவரை அதனை செய்திருக்கவில்லை. | குறித்துக்கொள்ளப்பட்டது. | ஆரம்ப திட்டத்திற்கு இணங்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | Subway நிறுவனத்தின் செயல்பாட்டின் மூலமான மீளாய்வாண்டின் மற்றும் முந்தைய ஆண்டின் விற்பனை வருமானம் முறையே ரூபா.43,223,601 மற்றும் ரூபா.45,847,479 தொகையாக இருந்த போதிலும் ரூபா.500,651 மற்றும் ரூபா.421,021 தொகையான நட்டம் முறையே ஏற்பட்டது.<br>எனவே, இந்த அங்கீகார வணிகத்திலிருந்து எதிர்மறையான திரும்பலை பெறுவது கம்பனிக்கு நிதி ரீதியாக இலாபகரமானது அல்ல. | குறித்துக்கொள்ளப்பட்டது,க இயக்குனர் சபை கூட்டங்களின் போது Subway இனை இலாபம் ஈட்டும் கம்பனியாக மாற்றுவது குறித்து சபையானது கலந்துரையாடியுள்ளது. இனி அது தொடந்தும் சாத்தியமில்லை என்றால், Subway இன் செயல்பாடுகளை நிறுத்துவது தொடர்பாக சட்ட ஆலோசனைக்குப் பிறகு இறுதி முடிவு எடுக்கப்படும். | Subway இனை இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |

## 3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்திய வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிர்வாக அலுவலகம், கடைகள் மற்றும் விஐபி கழிவறைகள் Canowin Arcade இன் மேல் தளத்தில் மட்டுமே அமைந்துள்ளன மற்றும் மேல் தளப் பகுதியின் மீதமான பகுதி முறையான முகாமை இன்மை காரணமாக நீண்ட காலமாக ஆக்கிரமிக்கப்படவில்லை. எனவே, இந்த பகுதியில் இருந்தான அதன் வாடகை வருமானத்தினை கம்பனி இழந்துள்ளது. | குறித்துக்கொள்ளப்பட்டது.<br>மேல் தளம் 2018க்கு முன் உணவகங்களுக்கு வாடகைக்கு விடப்பட்டது. இருப்பினும், மேல் தளத்திற்கு குறைந்த வாடிக்கையாளர் வருகை காரணமாக குத்தகைதாரர்கள் வெளியேறியுள்ளனர். | இருக்கும் இடத்தினை திறம்பட பயன்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச பெறுகைக் வழிகாட்டியின் பிரிவு 4.1.1 (அ) இன் பிரகாரம், திட்டத்தை சரியான நேரத்தில் நிறைவு செய்வதை உறுதி செய்யவும்மற்றும் அதற்கான சிறந்த சந்தை பெறுமதியினை பெற்றுக்கொள்ளவும் முழு மொத்த பெறுகை செயல்முறைக்குமான வினைத்திறனான திட்டமிடல் முக்கியமானது. இருப்பினும், நிறுவனம் 2023 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தினை குறிப்பிட்ட கால அட்டவணையுடன் தயாரிக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது.<br>பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக இயக்குனர் சபை கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.<br>எதிர்காலத்தில் விடுபட்ட இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று நாம் உறுதியளிக்கின்றோம். | தேசிய பெறுகை வழிகாட்டுதல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பெறுகை வழிகாட்டிகளின் 4.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்கால முயற்சிகளில் இந்த குறைபாட்டினை சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்போம் என்று நாம் உறுதியளிக்கின்றோம். | -மேற்குறிப்பிட்டவாறு- |
| (இ) | 2023 ஆம் ஆண்டிற்கான தொடர்புடைய பெறுகை குழு அரச பெறுகை வழிகாட்டுதல்களின் பிரகாரம் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பெறுகை குழுக்கள் நியமிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. | -மேற்குறிப்பிட்டவாறு- |
| (ஈ) | அரச பெறுகைப் வழிகாட்டுதல்களின் 4.3.1 (அ) இன் பிரகாரம் , 12 எண்ணிக்கையான பெறுகைகளுக்கான அனைத்து தொடர்புடைய செலவுகள் உட்பட மொத்த செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த விடயத்தை நிவர்த்தி செய்ய கொள்வனவுகளுக்கான மதிப்பீடுகள் எதிர்காலத்தில் தயாரிக்கப்படும். | -மேற்குறிப்பிட்டவாறு- |
| (உ) | எதிர்கால விலைனுதாரர்களுக்கு விலைமனுவினை அல்லது மேற்கோளைத் தயாரிக்க தேவையான தொடர்புடைய அடிப்படைத் தகவலைச் உள்ளடக்கிய விலைமனுக்கள் அரசு கொள்முதல் வழிகாட்டுதல்கள் 5.3.2 இன் பிரகாரம் நான்கு பெறுகைகளுக்கு தயாரிக்கப்படவில்லை. | பண்டக்குறி முகவர் மூலமாக மூன்று பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், இயக்குனர் சபையின் அங்கீகாரத்துடன் 01 கொள்வனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | -மேற்குறிப்பிட்டவாறு- |
| (ஊ) | அரச பெறுகை வழிகாட்டுதல்களின் 5.2.1 (அ) இன் பிரகாரம் விலை மனுவினை தயாரிப்பதற்கு வருங்கால விலைமனுதாரருக்கு தேவையான அனைத்து தொடர்புடைய தகவல்களையும் சேர்த்து கம்பனி ஏல ஆவணங்களைத் தயாரிக்கவில்லை. | குறித்துக்கொள்ளப்பட்டது, இதுபோன்ற சம்பவங்களை தடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | -மேற்குறிப்பிட்டவாறு- |
| (எ) | அரச பெறுகை வழிகாட்டுதல்கள் 6.3.6 இன் பிரகாரம், கம்பனி விலை மனுவினை திறப்பதற்கான பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தை பராமரிக்கவில்லை மற்றும் விலை மனு திறத்தல் குழுவின் அனைத்து உறுப்பினர்களாலும் விலை மனு திறத்தலுக்கான அறிக்கை கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. | குறித்துக்கொள்ளப்பட்டது, இந்த நோக்கத்திற்காக 2023 செப்டம்பர் 8 முதல் பதிவுப் புத்தகம் பராமரிக்கப்படுகிறது. | -மேற்குறிப்பிட்டவாறு- |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | அரச பெறுகை வழிகாட்டுதல்கள் 7.9.1 (அ) இன் பிரகாரம், ஏலங்கள் மதிப்பீடு செய்யப்படும் விதம் உள்ளிட்ட விலைமனு ஆவணங்கள், விலை மனுதாரரை தெரிவு செய்வதற்கான அளவுகோல் கம்பனியினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | -மேற்குறிப்பிட்டவாறு- |
| (ஐ) | விலைமனு மதிப்பீடு முடிந்த உடனேயே, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவானது (TEC) பெறுகை கையேட்டில் தரப்பட்டுள்ள வடிவத்தின் பிரகாரம் TEC அறிக்கையினை தயார்செய்தல் வேண்டும் மற்றும் அனைத்து ஆதார ஆவணங்களுடன் பெறுகை குழுவிடம் (PC) சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அரச பெறுகை வழிகாட்டுதல்கள் 7.11.1 இன் பிரகாரம், TEC அறிக்கையினை PC க்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்துக்கொள்ளப்பட்டது, மதிப்பீடு முடிவடைந்த பின்னர், தேவைப்பட்டால் எதிர்காலத்தில் விலை மனு மதிப்பீட்டு அறிக்கையினை TEC தயார் செய்யும். | -மேற்குறிப்பிட்டவாறு- |
| (ஒ) | அரச பெறுகை வழிகாட்டுதல்கள் 7.12.3 இன் பிரகாரம், மறு ஏலம் (Rebidding) தொடங்கும் போது முதல் அழைப்பில் பெறப்பட்ட அனைத்து விலை மனுக்களும் ரத்து செய்யப்பட வேண்டும் எனினும் முந்தைய விலைமனுவினை ரத்து செய்யாமல் முந்தைய விலை மனு உட்பட அனைத்து விலைமனுக்களும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. | குறித்துக்கொள்ளப்பட்டது, அதன்படி மறு ஏலம் ( Rebidding) மேற்கொள்ளப்படும். | -மேற்குறிப்பிட்டவாறு- |

## 3.5 ஒப்பந்த நிருவாகத்தில் உள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 ஆகஸ்ட் 29 மற்றும் 30 ஆகிய திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையில் Canowin Arcade இன் A மற்றும் B பக்கங்களில் பல சேதங்கள் அவதானிக்கப்பட்டன. மேலும், A பக்கத்தை சரிசெய்வதற்கான ஒப்பந்தம் ரூபா.1,480,000 தொகைக்கு வழங்கப்பட்டதை அவதானிக்க முடிந்தது. ஒப்பந்தம் முழுமையடையாத | குறித்துக்கொள்ளப்பட்டது, படிக்கட்டுகளின் சேதங்களை சரிசெய்யவே இது ஆரம்பிக்கப்பட்டது. B பக்கத்திற்கான விதிமுறைகள A பக்கத்திற்கான கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஒத்ததாகவே இருக்கின்றது. படிக்கட்டுகளின் | இது குறித்து விசாரணை நடத்த வேண்டியதுடன் பொறுப்பான நபரிடமிருந்து இழப்புகளை அறவீடு செய்ய வேண்டும். |

| | | |
| --- | --- | --- |
| போதிலும், கம்பனி முழு ஒப்பந்த தொகையினையும் செலுத்தியிருந்தது. இந்த Arcade இன் B பக்கத்தினை பழுதுபார்க்கும் ஒப்பந்தம் அதே ஒப்பந்ததாரருக்கு ரூ.1,680,000க்கு அரச பெறுகை வழிகாட்டுதல்களைப் பின்பற்றாமல் வழங்கப்பட்டது. | சேதங்களை சரிசெய்ய இது ஆரம்பிக்கப்பட்டது. | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2023 ஆம் ஆண்டை உள்ளடக்கிய காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து திணைக்களங்களின் உதவியுடன் நடைமுறையில் உள்ள சிக்கலை நிவர்த்தி செய்ய 2025 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படும். | அதன் தந்திரோபாய நோக்கங்களை அடைய கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படல் வேண்டும். |

### 4.2 சுற்றாடல் பிரச்சனைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| Canowin Arcade இன் A பக்கத்தில் உள்ள 2015 ஆம் ஆண்டின் போது நிர்மானம் செய்து முடிக்கப்பட்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கணக்காய்வு திகதியில் உள்ளவாறு செயல்படவில்லை. கழிவு நீர் முறையாக சுத்திகரிக்கப்படாமல் சுற்றுச்சூழலுக்கு வெளியேற்றப்பட்ட போதிலும், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த சுத்திகரிப்பு பொறித்தொகுதியினை பராமரிப்பதற்கான சேவை ஒப்பந்தம் காணப்படாததுடன் கணக்காய்வு திகதி முதல் பேணப்பட்டிருக்கவில்லை. | தற்போதுள்ள சேவை வழங்குநர் (ஒரே முகவர்) பழுதுபார்ப்பு மற்றும் சேவைக் கட்டணங்களுக்காக எதிர்பாராத செலவுகளைக் குறிப்பிட்டுள்ளார், இந்த விடயத்தில் அவர்களது தனியுரிமையினை திறண்பட பயன்படுத்தியுள்ளனர். இதன் விளைவாக, நாங்கள் முகாமை என்ற காரணத்தால், இந்த விடயங்களுக்கு தீர்வு காண மாற்று முடிவை எடுக்க வேண்டியிருந்தது. சேவைகளை மேற்கொள்வதற்காக நாங்கள் ஒரு இயந்திர இயக்குனரை நியமித்துள்ளோம், மேலும் சமீபத்தில் பரிந்துரைகளை வழங்குவதற்கு மறுமொரு குழுவினை நாங்கள் நியமித்துள்ளோம். இதன் அடிப்படையில் இந்த பிரச்சினைகளை ஒவ்வொன்றாக நாங்கள் வினைத்திறனாக தீர்த்து வருகின்றோம். எவ்வாறாயினும், ஒரு நிறுவனமாக, சேவைத் திட்டத்தின்படி சேவைகளைத் தொடங்கவும், அதே நேரத்தில் ஒரு வழக்கமான தடுப்பு பராமரிப்பு அட்டவணையை விரைவில் நிறுவவும் , அனைத்து தொழில்நுட்ப சிக்கல்களுக்கும் நிரந்தர தீர்வுகளை செயல்படுத்துவோம். | பிரச்னையை நிவர்த்தி செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |